www.Padasalai.Net www.CBSEtips.in

நா. தேவேந்த

முதல் இடைப்பருவத் தேர்வு - 2023-24

தமிழ்

மதிப்பெண் : 50

கால அளவு: 1.30 மணி

பகுதி -1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 x 1 =10

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந்+ தமிழ் +நா ஆ) எந்த+ தமிழ்+ நா இ) எம் +தமிழ்+ நா ஈ) எந்தம் +தமிழ்+ நா

2. மொழிஞாயிறு என்று அழைக்கப்படுபவர்
அ) தாமோதரனார் ஆ) தேவநேயப் பாவாணர் இ) இளங்குமரனார் ஈ) வரதராசனார்

3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம். உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள்
அ) உருவகம் ,எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண் ,இயைபு ஈ) உவமை, எதுகை

4. முல்லைப்பாட்டு எந்த நூல்களுள் ஒன்று?
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதினெண் கீழ்க்கணக்கு ஈ)காப்பியம்

5. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ)சிற்றூர்

6. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்று பாடியவர்
அ) ஔவையார் ஆ) இளங்கோவடிகள் இ) சேக்கிழார் ஈ)கம்பர்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

"நனந்தலை உலகம் வளையி நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

7. இப்பாடலின் ஆசிரியர் -
அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

8. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் –
அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

9. 'மாஅல்' - சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை இ) செய்யுளிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

10. பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
அ) பாடுஇமிழ் ,கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும் பெயல்
இ) நனந்தலை, வலம்புரி ஈ)பொறித்த, பொழிந்த

பகுதி - II (பிரிவு – I)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 3 x2 = 6

11. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
ஆ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

12. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

13. வசன கவிதை - குறிப்பு வரைக.

14. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக

(பிரிவு – 2)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 3 x 2 = 6

15. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க (சிலை - சீலை)

16. தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
1. கீரிபாம்பு, 2. முத்து பல்

17. 'வேங்கை ' என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக

18. கலைச்சொற்கள் தருக. 1) Modern Literature 2) Storm

19. பகுபத உறுப்பிலக்கணம் தருக: பொறித்த

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி - III (பிரிவு - I)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3 = 6

20.உரை பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர் . உறவினர் வேறு, விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ)விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது ?

இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக .

21.'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க

22.சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 X 3 = 6

(25. ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க.)

23.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

24.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப் படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

25.அடி பிறழாமல் எழுதுக

'அன்னை மொழியே ' எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடல்.

(அல்லது)

'சிறு தாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

## பிரிவு - 3


**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

26.தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக

27.அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்

-இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக

28. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க.** 2 x 5 =10

29."மரம் இயற்கையின் வரம் "எனும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

(அல்லது)

உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

30. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

********************************

www.Padasalai.Net